| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராம வர்மா, | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| சென்னை - 600 006. | அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

ந.க.எண். 006381 / எச்1 / 2024 நாள்: 19.06.2024

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 - மேல்நிலை இரண்டாமாண்டு துணைத்தேர்வு, ஜூன்/ஜூலை 2024 - தனித்தேர்வர்கள் – தேர்வு மையங்களில் செய்முறைத் தேர்வு நடத்துதல் தொடர்பான அறிவுரைகள் –சார்பு.

-----

நடைபெறவுள்ள ஜூன்/ஜூலை 2024, மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வுகளை எழுதவுள்ள தனித்தேர்வர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் தொடர்பான கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் / பள்ளித்தலைமை ஆசிரியர், தனித்தேர்வர்களுக்கு செய்முறைத்தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடம் குறித்த அறிவிப்பினை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.

2. <u>பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல்.</u>

   - **ஏற்கனவே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில், பழைய நடைமுறையில் செய்முறைத் தேர்வெழுதி 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டும் தற்போது 30 மதிப்பெண்களுக்கு செய்முறை புறத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.**

- **தனித்தேர்வர்கள் செய்முறைப் பதிவேடு மற்றும் திறன் மதிப்பீட்டிற்கான மதிப்பெண் விவரத்தினை தாங்கள் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வழங்கினால், அதனடிப்படையில் அவற்றுக்கான (20) மதிப்பெண்களையும், செய்முறை புறத்தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து வழங்க வேண்டும். (செய்முறைப் பதிவேடு -15, திறன்மதிப்பீடு -5, செய்முறைப் புறத்தேர்வு-30, மொத்தம் -50 மதிப்பெண்கள்).**

- எழுத்துத் தேர்வில் 30 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாமல், செய்முறைத் தேர்வில் (40 மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேலாக) தேர்ச்சி பெற்றவர்கள், மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அதே போன்று, எழுத்துத் தேர்வில் (30 மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேலாக) தேர்ச்சிப் பெற்று செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்கள், எழுத்து தேர்வினை மீண்டும் எழுத வேண்டியதில்லை. செய்முறைத் தேர்வு மட்டும் பங்கேற்றால் போதுமானது.

- மேலும், மார்ச் 2001 மேல்நிலைத் தேர்விற்கு முன்னதாக தேர்வெழுதியவர்கள் தாங்கள் செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண் விவரம் குறித்த சான்றினை தாங்கள் படித்த மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இச்சான்றினை படித்த பள்ளியில் பெறமுடியாமற்போனால், கண்டிப்பாக மறுபடியும் செய்முறை தேர்விற்கு வருகைபுரிய வேண்டும்.

**3. <u>புதிய நடைமுறையில் (600 மதிப்பெண்கள்) மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல்.</u>**

- **ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு மட்டும் தற்போது 15 மதிப்பெண்களுக்கு செய்முறை புறத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.**

- **தனித்தேர்வர்கள் செய்முறைப் பதிவேடு மற்றும் திறன் மதிப்பீட்டிற்கான மதிப்பெண் விவரத்தினை தாங்கள் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வழங்கினால், அதனடிப்படையில் அவற்றுக்கான** (5) **மதிப்பெண்களையும், செய்முறை புறத்தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து வழங்க வேண்டும். (செய்முறைப் பதிவேடு** -3, **திறன் மதிப்பீடு** -2 **மற்றும் செய்முறை புறத்தேர்வு** -15, **மொத்தம்** -20 **மதிப்பெண்கள்**).

- அரசாணை எண் (2டி) 50, பள்ளிக்கல்வித் (ஜிஇ1)துறை, நாள்.09.08.2017-ன்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சிப் பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற்று செய்முறைத் தேர்வில் கட்டாயம் பங்கேற்றிருக்க வேண்டும். மேலும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக 100-க்கு குறைந்தபட்சம் 35 மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும். செய்முறைத்தேர்வில் பங்கேற்காமல், தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் (35) பெற்றிருந்தாலும், அத்தேர்வர்கள் தேர்ச்சி பெறாதவர்களே ஆவர். அத்தேர்வர்கள் செய்முறைத் தேர்வில் பங்கேற்கவேண்டும்.

- அரசாணை (நிலை) எண்.61, பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள். 29.02.2024-ன்படி செய்முறைத் தேர்வடங்கிய கருத்தியல் பாடங்களில் கருத்தியல் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் 15 அல்லது அதற்கு மேல் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத தேர்வர்கள் செய்முறைத் தேர்வினை மட்டும் எழுத வேண்டும்.

4. மேல்நிலை இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தனித்தேர்வர்களின் மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான மதிப்பெண் பட்டியல் படிவங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன. இப்படிவங்களைப் பூர்த்தி செய்து பள்ளி தலைமையாசிரியர் / முதன்மைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 03.07.2024-**க்குள்** ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலும், மேற்குறிப்பிட்டவாறு தனித்தேர்வர்களுக்கான தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்படும், மேல்நிலை இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வில் பங்குகொண்ட தனித்தேர்வர்களுக்கான மதிப்பெண் பட்டியல்களை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் பெற்று கொண்டு 04.07.2024 அன்று தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் Google Sheet -ல் 06.07.2024-க்குள் பதிவேற்றம் செய்திடவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**:

1. வெற்று மதிப்பெண் பட்டியல் படிவம்
2. +2 தனித் தேர்வர்களுக்கான தேர்வு மையங்கள்

**ஒம்**/-

**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்).
2. கண்காணிப்பாளர், எச்.4 பிரிவு (அலுவலகம்)

## HSE SECOND YEAR JUNE / JULY 2024 PRACTICAL MARK SHEET

**For Private Candidates**

**(Who have not already appeared for Practical Exam)**

| SL NO | PERMANENT REGISTER NUMBER | ROLL NUMBER | NAME | SUBJECT CODE | PRACTICAL | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | SUBJECT NAME | MARK | | | REMARKS |
| | | | | | | EXTERNAL | INTERNAL | TOTAL | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |